[2003 ஏப்ரல் 21

மாணவர் நலன் காத்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியில் அடுத்த நிதியாண்டிலாவது விடுதிக்கு அரசுக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டைப் பொறுத்தவரையிலும், அங்கே நிலம் தேர்வு செய்யப்படாததால், கட்டடம் கட்டுவதற்கு வகை செய்யப்படவில்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலம் அந்த இடத்திலே இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நிலம் இருப்பதாக இருந்தால் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, வரும் நிதியாண்டில் அதுகுறித்து பரிசீலிக்கும் என்பதை உங்கள் வாயிலாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 269, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

269—

பீடித் தொழிலாளர்கள் நலன்

***25110—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள எடப்பாடி நகரில் பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

2003 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் இருக்கையில் இல்லை.

வினா எண் 270, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

270—

விவசாயக் கல்லூரி

***22146—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியத்திலுள்ள அண்ணா பண்ணையில் விவசாயக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியத்திலுள்ள அண்ணா பண்ணையில் விவசாயக் கல்லூரி அமைக்கும் கருத்துரு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே அன்னவாசல் ஒன்றியத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய அண்ணா பண்ணை என்பது பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே 1967 ஆம் ஆண்டு அண்ணா அவர்களாலே உருவாக்கப்பட்டது. ஏறத்தாழ 1017 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட மிகப்பெரிய பண்ணையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே அண்ணா பண்ணை என்பது மட்டும் 643 ஏக்கருக்கு மேலே இருக்கிறது. மீதமுள்ள பகுதிகளில் எல்லாம் வெப்ப பிராந்திய பழப் பண்ணை, உழவர் பயிற்சி நிலையங்கள் ஆகியவை அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு விவசாயக் கல்லூரியை அமைப்பதற்குத்